# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 106
தொலைபேசி எண். 2475 3001 நிகரி 2475 3300, 24751870
மின் அஞ்சல் tnsec.tn@nic.in இணையதளம் www.tnsec.tn.nic.in

**செய்தி வெளியீடு எண். 106 /2011** **நாள். 20.10.2011**

தமிழ்நாட்டில் 17.10.2011 மற்றும் 19.10.2011 ஆகிய இருநாட்களில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் வாக்குப்பெட்டிகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் வாக்கு எண்ணுகை மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் ஊரக பகுதிகளில் 400 வாக்கு எண்ணுகை மையங்கள், நகரப்பகுதிகளில் 422 வாக்கு எண்ணுகை மையங்கள் என மொத்தம் 822 வாக்கு எண்ணுகை மையங்களில் வாக்குகள் எண்ணப்பட உள்ளன.

சென்னை மாநகராட்சிக்கான தேர்தலில் நாளை (21.10.2011) வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள 18 இடங்களில் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) அமைக்கப்பட்டுள்ள 35 அறைகளில் மாநகராட்சி மேயர் மற்றும் மாநகராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு என தனித்தனியாக வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கையின் போது, தொடர்புடைய வார்டுக்குரிய வேட்பாளர்களின் முகவர்கள் வாக்கு எண்ணும் அறையில் அமர வைக்கப்பட்டு இருப்பார்கள். அடுத்த வாக்குகள் எண்ண வேண்டிய வார்டுக்கான முகவர்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ள ஓய்வு அறையில் காத்திருப்பார்கள். ஒரு வார்டுக்கான வாக்கு எண்ணிக்கை முடிந்ததும், அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டவுடன் அடுத்த வார்டுக்கான வேட்பாளர்களின் முகவர்கள் ஓய்வறையிலிருந்து வாக்கு எண்ணும் அறைக்கு அழைக்கப்படுவார்கள். இதனால் கூட்ட நெரிசல் இல்லாமல் வாக்கு எண்ணிக்கையை பார்வையிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் மையத்தில் தொடக்கத்திலிருந்து முடியும் வரை வீடியோ பதிவும்/வெப் காஸ்டிங்கும் (web casting) செய்திட சென்னை மாநகராட்சி அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

வாக்கு எண்ணும் அறையில் உரிய அனுமதி பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். மற்றவர்களுக்கு அனுமதி இல்லை. வாக்கு எண்ணிக்கையை கவனிக்கும் முகவர்கள் மிகுந்த கட்டுப்பாடுடன் தேர்தல் விதிமுறைகளை மதித்து நடக்க வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் போது விதி மீறல் எங்கு நடந்தாலும் உடனடியாக கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

உலகத்தில் எந்த மூலையில் இருப்பவர்களும், மாநிலம் முழுவதும் நடக்கின்ற வாக்கு எண்ணிக்கை முடிவுகளை அவரவர்கள் இருந்த இடத்திலிருந்தே www.tnsec.tn.nic.in என்ற வலை தளம் மூலமாக பார்க்கலாம் என மாநிலத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

(ஒம்) லோ.கிருஷ்ணமூர்த்தி,
மக்கள் தொடர்பு அலுவலர்

# Local Body Elections 2011 - list of counting Centres

## CHENNAI CORPORATION

| Sl. No. | Whether Rural / Urban local body | No.of Counting Centres | Name & Address of the Counting Centres | Phone & Fax No. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | |
| 1 | Urban Local Body | 1 | Thiyagaraya College, No. 345/1047, T.H.Road, Old Washermenpet, Chennai -21. | |
| 2 | | 2 | Chennai Hr.Sec.School, No. 731, T.H.Road, Tondaiyarpet, Chennai 81. | |
| 3 | | 2 | Bharathi Arts College, No. 1, Prakasam Salai, Chennai 108. | |
| 4 | | 2 | P.T. Chengalvarayan Poly Technic, Vepery, Chennai -7. | |
| 5 | | 3 | Pachaiappa's Cllege, No. 113, E.V.R. Periyar Salai Chennai-30. | |
| 6 | | 2 | Queen Mary's College, Kamarajar Salai, Chennai-5. | |
| 7 | | 2 | Loyala College, Sterling Road, Nungambakkam, Chennai -34. | |
| 8 | | 2 | Meenakshi Engineering College, Vembuli Amman Koil Street, Virugambakkam Chennai. | |
| 9 | | 2 | Central Polytechnic, Rajiv Gandhi Salai, Adyar, Chennai-20 | |
| 10 | | 2 | College of Engineering Anna University, Sardar Patel Road, Guindy, Chennai -25. | |
| 11 | | 2 | Vellaiyan Chettaiar Hr.Sec.School, T.H.Road, Thiruvotriyur, Chennai -19. | |
| 12 | | 1 | St. Sebastin Industrial Training College, Madhavaran, MRH Road, Chennai 60. | |
| 13 | | 2 | Vellammal Engineering College, Vellammal Nagar, Surapet, Ambathur-Redhills Road, Chennai-66. | |
| 14 | | 2 | DAV Senior Secondary Boys School, Thirumangalam Road, Mogappair, Chennai-50. | |
| 15 | | 2 | Rajarajeswari Engineering College, Poonamallee High Road, Adyalampattu, Chennai 95. | |
| 16 | | 2 | Mont Fort Training Institute, Near Jothi Theatre, Contonment Office Road,Chennai -16 | |
| 17 | | 2 | Asan Memorial College, Velachery Main Road, Pallikkaranai, Chennai - 100. | |
| 18 | | 2 | D.B.Jain College, Old Mahabalipuram Road, Thuriapakkam, Chennai -69. | |